# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2021–ம் வருடம் ஜனவரி 2021 மாதம் 29–01–2021–ம் தேதி காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது அக்கூட்ட நடவடிக்கைகள் விபரம் பின்வருமாறு.

அக்கூட்டத்தில் கலந்துக்கொண்டவர்கள் – திரு . பெர்பெற்றி டெரன்ஸ் லியோன்,MSc.,
ஆணையாளர்(ம) தனி அலுவலர்

## பொருட்கள்

1)மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண்.237/செமதொஅ/2020, நாள் 05/12/2020-ன் வாயிலாக கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 ( .4301998 2000)-இன் படி செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வாயிலாக சம்மந்தப்பட்ட துறைகளில் மேற்கொள்ளப்படும் அரசு கொள்முதல், விலைப்புள்ளி கோரும் அறிவிப்புகள், சாலை மேம்பாட்டுப் பணிகள், புதிய பணிகள் போன்ற விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

மேற்படி விளம்பரங்கள் இயக்குனர், செய்தி மக்கள் தொடர்புதுறை அவர்களின் ஆணைப்படி அரசால் தேர்வு செய்யப்பட்ட திருவாளர் பிரான் பிரிண்டிங் பிரஸ், கே.பி. ரோடு, கோட்டார், நாகர்கோவில் – 629 002 என்ற தனியார் அச்சகத்தார் மாவட்ட ஒப்பளிப்பு செய்தி மலரில் அச்சடித்து வழங்கி வருகின்றனர்.

மேற்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் அச்சடித்து வழங்கப்பட்ட வகையில் 12/07/2016 முதல் தற்போது வரை மேற்கண்ட திருவாளர் பிரான் பிரிண்டிங் பிரஸ், கோட்டார், நாகர்கோவில் அவர்களுக்கு ரூ.2,24,260/- நிலுவைத் தொகையாக நேர்வு செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நேர்வு செய்யப்பட்ட தொகையில் (ரூ.224260/-ல்)இந்நகராட்சிக்குரிய தொகை ரூ.7000/-த்தினை செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட தொகை ரூ. 7000/-னை “ , என்ற பெயருக்கு வங்கி வரைவோலையாகவோ அல்லது கேட்போலையாகவோ, தயார் செய்து வழங்கவும் செலவினத்தினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி தொகை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 021/2019/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1750</u>

அனுமதிக்கப்படுகிறது.

2)இந்நகராட்சிக்குட்பட்ட ஈப்பு வாகனம் எண் 74 0436 – க்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 14/12/2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | நிறுவனதாரரின் பெயர்கள் |
|---|---|
| 1 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்,<br>புதுக்குடியிருப்பு , நாகர்கோவில். |
| 2 | அக்ஷயா மோட்டார் ஒர்க்ஸ்,<br>உண்ணாமலைக்கடை. |
| 3 | மாதவன் மோட்டார் ஒர்க்ஸ்,<br>வெள்ளமடம்,<br>நாகர்கோவில். |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கு கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது.

| வ. எண். | பணியின் விபரம் | நிறுவனதாரரின் விலை விகிதம் | | |
|---|---|---|---|---|
| | | அக்ஷயா மோட்டார் ஒர்க்ஸ், உண்ணாமலை கடை , நாகர்கோவில். | மாதவன் மோட்டார் ஒர்க்ஸ், உண்ணாமலைக் கடை. | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், புதுக்குடியிருப்பு நாகர்கோவில். |
| 1 | Check up the four wheels and grease and packing work (Replace the old bearing with new one in the rear wheels) | 3850.00 | 3950.00 | 4300.00 |
| 2 | kent player repair work | 1000.00 | 1100.00 | 1200.00 |
| 3 | Fixing the new joint star | 1680.00 | 1860.00 | 1950.00 |
| 4 | Fixing the new wiper blade | 380.00 | 400.00 | 400.00 |
| 5 | Fixing the new dynamo meter belt | 250.00 | 320.00 | 360.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | diesel pump switch repair work | 750.00 | 410.00 | 540.00 |
| 7 | Joint bolt replacing | 100.00 | 120.00 | 120.00 |
| 8 | Check up the electrical work | 1000.00 | 1200.00 | 1300.00 |
| 9 | steering tight repair work | 3700.00 | 3800.00 | 4000.00 |
| 10 | Fixing the new suspension bush | 4000.00 | 4200.00 | 4650.00 |
| 11 | suspension repair work | 5400.00 | 6000.00 | 6200.00 |
| 12 | Engine oil repair work | 1000.00 | 1200.00 | 1200.00 |
| 13 | bottom bar repair work and changing bush | 3500.00 | 4000.00 | 4200.00 |
| 14 | full service and wheel alignment | 1650.00 | 1750.00 | 1850.00 |
| 15 | Fixing the new Oil filter, disel filter and air filter | 1000.00 | 1000.00 | 1120.00 |
| 16 | GST 18 % | 5266.00 | 5636.00 | 6010.00 |
| Total | | **34526.00** | **36946.00** | **39400.00** |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் விட குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள அக்ஷயா மோட்டார் ஒர்க்ஸ், உண்ணாமலைக்கடை என்ற நிறுவனதாரரின் விலைப்புள்ளியை ஏற்கவும் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு;- மன்றம் அனுமதிக்கலாம்.

<u>மன்றத் தீர்மானம் எண்.1751</u>

குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.

3)இந்நகராட்சியில் 2015,2016-ம் ஆண்டுகளில் ஒப்பந்ததாரராக பணிபுரிந்த திரு. ஜேம்ஸ் என்பவர் கடந்த ஆண்டு 15/04/2018-ம் தேதி மரணடைந்துள்ளார். அன்னார் பணி செய்த காலத்தில் உள்ள பணிக்கான பட்டியல் தொகையில் பிடித்தம் செய்த தொகையினை (EMD(ம) PSD) திரு.ஜேம்ஸ் என்பவரின் மனைவி திருமதி. சுபலா ஜெயந்தி வழங்க கோரியுள்ளார்.

மேற்படி அன்னாரின் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை காலம் கடந்த வைப்புத் தொகையாக மாறியுள்ளதால் தற்போது காலம் கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1098/2020/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1752</u>

அனுமதிக்கப்படுகிறது.

4)இந்நகராட்சியில் 2015-2016 மற்றும் 2016-2017-ஆம் ஆண்டுகள் ஒப்பந்த பணி எடுத்து செய்து வந்தமைக்கான பட்டியல் தொகை மற்றும் பிடித்தம் தொகையினை வழங்க கோரி திரு. ஜேம்ஸ் (லேட்) என்பவரின் மனைவியாகிய திருமதி. ற்றி.சுபலா ஜெயந்தி என்பவர் சென்னை உயர் நீதி மன்ற மதுரைக் கிளையில் வழக்கு எண். .() 19601 மற்றும் 19603/2020-ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கினை இந்நகராட்சி சார்பாக ஏற்று நடத்த திரு. பி. ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் அவர்களிடம் இவ்வழக்கினை ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் வழக்கிற்கு ஆகும் செலவினத்தினையும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1098/2020/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண். 1753</u>

அனுமதிக்கப்படுகிறது.

5) இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண். மதி4/1732/2019, நாள் 18/10/2019-ன் படி கன்னியாகுமரி மாவட்டம் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் – பகுதி அளவிலான கூட்டமைப்பு () மற்றும் நகப்புற வாழ்வாதார மையம் () செயல்பாட்டிற்கு –பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட டவுண்ஹால் கட்டிடத்தின் ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன்படி இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.1556, நாள் 31/10/2019-ன் மேற்கண்ட டவுண்ஹால் கட்டிடத்தின் ஒரு பகுதியை நகர்ப்புற வாழ்வாதார மையத்திற்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி ஆணையர் அவர்களின் நேரடி அறிவுரையின் படி தற்பொழுது ஒதுக்கீடு செய்து பயன்பெறும் வகையில் மேற்கண்ட டவுண்ஹால் கட்டடம் உள் பகுதியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தற்சமயம் இவ்வலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்ய இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.1592, நாள் 29/01/2020-ன் படி அனுமதி வழங்கப்பட்டு இவ்வலுவலக கடிதம் எண். 1513/2019/இ1, நாள் 13/02/2020-ன் மூலம் இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் ஆணையாளர் அவர்களின் 12/06/2020-ம் தேதிய உத்திரவின்படி மேற்கண்ட டவுண்ஹால் மையத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார மையம் அமைக்க மையத்தில் பராமப்பு பணிகள் (மேற்கூரை சரி செய்தல், மின்சார வசதி (ம) வர்ணம் பூசுதல்) மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி தற்பொழுது டவுண்ஹால் கட்டிடங்கள் பராமரிப்பு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்ட காரணத்தினால் மேற்படி இரண்டு நகர் மன்ற தீர்மானம் ரத்து செய்து விட்டு இந்நகராட்சிக்குச் சொந்தமான டவுண்ஹால் கட்டிடத்தின் ஒரு பகுதி 2908.அ) தேசிய நகப்புற வாழ்வாதார மையத்திற்கு கட்டணம் எதுவுமின்றி ஒதுக்கீடு செய்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ .கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1513/2019/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண். 1754</u>

அனுமதிக்கப்படுகிறது.

6)ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம,அ.தி 3) துறை அரசு ஆணை (நிலை) எண். 170 நாள் 27/10/2020-ம் தேதிய புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பு செய்து சிறப்பு நிதியுதவி வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பாவைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் அதற்காகும் உத்தேச செலவீனத்திற்கும் கணக்கெடுப்பு பணிக்கு ஒரு படிவத்திற்கு ரூ.5/- (ம) கணணியில் பதிவேற்றம் செய்வதற்கு ரூ.5/-ம் ஒரு படிவம் கணணியில் பதிவிறக்கம் செய்வதற்கு ரூ.5/-ம் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1093/2020/அ2)

<u>மன்றத் தீர்மானம் எண். 1755</u>

அனுமதிக்கப்படுகிறது.

7)இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் ( 1 முதல் 21 வார்டுகள்) குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை 2020-2021 -ஆம் ஆண்டு வருடாந்திர பழுது (ம) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதன்படி மேற்கண்ட ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிக்கு உத்தேசமாக ரூ.6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தினை இந்நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0134/2021/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண். 1756</u>

அனுமதிக்கப்படுகிறது.

8)இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் ( 1 முதல் 21 ) உள்ள குடிநீர் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை 2020-2021-ம் ஆண்டு வருடாந்திர பழுது (ம) பராமப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதன்படி மேற்கண்ட வருடாந்திர பராமரிப்பு பணிக்கு உத்தேசமாக ரூ.6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்திற்கு இந்நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அவசர

அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 133/2021/இ1)

<u>**மன்றத் தீர்மானம் எண். 1757**</u>

அனுமதிக்கப்படுகிறது.

9) இந்நகராட்சியில் 2018- 2019 –ன் கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இந்நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.மேற்படி குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொண்ட நிலையில் ஆலம்பாறை சாலை, .ஆசான்கிணறு சாலை ,மற்றும் உதயகிரிக்கோட்டை சாலைகள் தோண்டப்பட்டு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேற்கண்ட சாலைகளை மேம்படுத்த ( ) பணி செய்த பின்னர் தான் தார்ச்சாலை பணிகள் செய்ய இயலும்

மேற்படி ( ) பணி திட்டப்பணியில் சேர்க்கப்படாத காரணத்தினால் மேற்கண்ட சாலைகளை சீரமைப்புபணிகள் மேற்கொள்ள பொது நிதியில் இருந்து செய்வதற்கு உத்தேசமாக ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.120/2021/இ1)

<u>**மன்றத் தீர்மானம் எண். 1758**</u>

10)இந்நகராட்சியில் 2019- 2020 –ன் கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இந்நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.மேற்படி குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொண்ட நிலையில் பாப்புலர் தெரு,தர்ஹா சாலை,வாழவிளை பிரதான சாலை ,செட்டித்தெரு , மற்றும் ஹெவன் பார்க் சாலைகள் தோண்டப்பட்டு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேற்கண்ட சாலைகளை மேம்படுத்த ( ) பணி செய்த பின்னர் தான் தார்ச்சாலை பணிகள் செய்ய இயலும்

மேற்படி ( ) பணி திட்டப்பணியில் சேர்க்கப்படாத காரணத்தினால் மேற்கண்ட சாலைகளை சீரமைப்புபணிகள் மேற்கொள்ள பொது நிதியில் இருந்து செய்வதற்கு உத்தேசமாக ரூ.4.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.121/2021/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1759</u>**